மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.205/2022</u>

2026ம் ஆண்டு ஏப்ரல் 17ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>17.04.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். குமாரசாமி தான் என்னை சாட்சியமளிக்க அழைத்து வந்தார் என்றால் நானாகத்தான் வந்தேன். நான் எங்கு குடியிருக்கிறேன் மற்றும் என்னுடைய வயது ஆகியவற்றை காண்பிப்பதற்கு ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் பங்காளி உறவு முறை. பிரதிவாதி இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 21/2022 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. நான் இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பில் இரண்டாவது சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி மேற்படி

வழக்கை அவர் பூமியை பொறுத்து மட்டும் தான் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். பிரதிவாதியின் காலை எண்.883. அந்த பூமியின் தென்புறத்தில் கிழமேலாக இந்த வழக்கின் வாதிகளுக்கு தென்வடலாக தடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 883 காலைக்கு கிழப்புரத்தில் வாதிகளுக்கு தென்வடலாக தடம் உள்ளது என்றால் இல்லை.

3. நான் அசல் வழக்கு எண் 21/2022 வழக்கில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டபோது எனது குறுக்கு விசாரணையில் தாவா சொத்திற்கு தென்புறத்திலும் கிழப்புறத்திலும் பிரதிவாதிகள் பூமி உள்ளது என்றால் சரிதான் என்றும் தாவா சொத்திற்கு தென்புற அத்தாக பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கிழமேல் தடம் உள்ளது என்றால் சரிதான் என்றும், கிழப்புரத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தென்வடல் தடம் உள்ளது என்றால் ஆமாம் என்றும் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி வழக்கில் நான் சாட்சியம் அளித்த போது பிரதிவாதி பூமிக்கு தென்புறத்திலும், கிழப்புறத்திலும் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தடம் உள்ளது என்பதை நான் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துவிட்டு தற்போது அதற்கு முரணாக மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை வாதிகள் எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. இந்த வழக்கை வாதிகள் க.ச.எண்.886 மற்றும் 887 ஆகியவற்றில் செல்லும் வாதிகளின் தடத்தை பிரதிவாதி இடைஞ்சல் செய்யக்கூடாது

என்ற பரிகாரம் கேட்டு வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் இல்லை. பொளி பிரச்சனை காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். உபயவாதிகளுக்கு இடையே பொலி பிரச்சனை எதுவும் இல்லை என்றும், வாதிகள் பூமியில் செல்லும் தடத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்வதால் தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதிகள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமியின் காலை எண்.886 மற்றும் 887 என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

6. வாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதிகள் பூமி ஆன 886 பூமியில் வடக்கோட்டில் கிழமேலாகவும் 887 பூமியின் மேற்புறத்தில் தென்வடலாகவும் தடம் உள்ளது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண்.886 மற்றும் 887 ஆகிய பூமிகளில் பிரதிவாதிக்கு எவ்வித பாத்தியமும் அனுபவம் கிடையாது என்று சொன்னால் சரிதான். 09.09.2022 ஆம் தேதி நானும் பிரதிவாதியும் சென்னை சென்றதாகவும், 10.09.2022-ம் தேதி சென்னையில் இருந்ததாகவும் பின்பு 11.09.2022 ம் தேதி திரும்பி வந்ததாகவும் நான் சொல்லி உள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

7. நானும், பிரதிவாதியும் மேற்படி தேதிகளில் சென்னை சென்று வந்தோம் என்பதற்கு ஆவணங்களை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பேருந்தில் சென்று வந்ததால் ஆவணங்கள்

எதுவும் இல்லை. என்னுடன் சென்னை சென்று வந்ததாக பிரதிவாதி தான் தாக்கல் செய்த எதிர்வழக்குறை மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படாத நிலையில் நான் பிரதிவாதியோடு சென்னை சென்று வந்ததாக தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. வாதிகள் எந்த தேதியில் எங்கு வைத்து எவ்வளவு தொகைக்கு பிரதிவாதியின் பூமியை விலைக்கு கேட்டார்கள் என்பதைப் பொறுத்து நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் பிரதிவாதிகள் பூமியில் எந்த விதமான வேலி அமைப்புகளும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கம்பி வேலியை உடைத்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. இந்த வழக்கில் வாதிகளுக்கும் தனக்கும் சட்டமன்றத் தேர்தலில் பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லி உள்ளார் அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்தப் பிரச்சினை பயன்படுத்தி தான் பிரதிவாதிகள் பூமியில் உள்ள அத்துக்கற்களை அழித்து கம்பி வேலி போட முயற்சி செய்தார் என்று சொன்னால் சரியல்ல.

10. வாதிகளின் தாவா சொத்தை இடைஞ்சல் செய்ய பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்றும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் என் வயதைக் காட்ட தாக்கல் செய்த ஆவணங்களில் என் வயது

தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என் வயதை காட்ட வேறு ஆவணங்கள் வேண்டுமானால் தாக்கல் செய்கிறேன்.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.04.17 18:55:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்